BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# ஜூலை 2 ஆம் தேதி முதல் ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்தில் கூடுதல் எண்ணிக்கையிலான பயணிகளுடன் பேருந்துகள் இயக்கப்பட உள்ளன மருத்துவம் அல்லாத முகக் கவசங்கள் அணிவது கட்டாயம், கட்டணம் செலுத்துவது அவசியம், மற்றும் பேருந்தின் முன் வாசலில் ஏறுவது, ஆகியவை மீண்டும் அமலாகின்றன.

ப்ராம்ப்ட்டன், ON (ஜூன் 29, 2020) – பீல் ப்ப்ளிக் ஹெல்த் அமைப்பின் வழிகாட்டுதலுடனும், ப்ராம்ப்ட்டன் நகரை மீண்டும் திறந்து விடுதல் மற்றும் மீட்சி பெறவைத்தலுக்கான திட்டத்தின் ஒரு பகுதியாகவும், ஜூலை 2, வியாழக்கிழமை முதல் ப்ராம்ட்டன் பேருந்து போக்குவரத்து அமைப்பானது, பேருந்துகளில் கூடுதல் எண்ணிக்கையில் பயணிகள் ஏற அனுமதித்து இயக்கவுள்ளது.

பீல் பப்ளிக் ஹெல்த் அமைப்பு மற்றும் ஒன்ட்டேரியோ அரசாங்கத்தின் கட்டாயமான இந்தப் பரிந்துரையைத் தொடர்ந்து, பயணிகள் பேருந்துகளில் இருக்கும்போது முகக் கவசம் அணிய வேண்டும் என நினைவூட்டுகிறார்கள்; ஜூலை 2 ஆம் தேதி முதல், பேருந்து பயணிகளும் இயக்குபவர்களும் மருத்துவம் அல்லாத முகக் கவசத்தை பேருந்துகளில் மற்றும் பேருந்து முனையங்களில் இருக்கும்போதும் அணிவது கட்டாயமாகிறது. பேருந்துக் கட்டணம் செலுத்துதல், மற்றும் பேருந்தின் முன்வாசலில் ஏறுவதும் மீண்டும் அமலாகிறது.

**பேருந்துகளில் அதிகரித்த எண்ணிக்கையிலான பயணிகள்**

ஜூலை 2 ஆம் தேதி முதல் ப்ராம்ப்ட்டன் போக்குவரத்து பேருந்துகளில் அதிகரித்த எண்ணிக்கையில் பயணிகள் ஏற அனுமதிக்க இருப்பதால், பயணிகள் அந்த நாளில் இருந்து மருத்துவம்-அல்லாத முகக் கவசம் அணிவது அவசியமாகும். ஒவ்வொரு பேருந்திலும் அனுமதிக்கப்பட இருக்கின்ற அதிகபட்ச பயணிகளின் எண்ணிக்கை பின்வருமாறு:

- 40 அடி நீள பேருந்து: 35 பேர்
- 60 அடி நீள பேருந்து: 55 பேர்

இந்த அதிகரித்த எண்ணிக்கையானது பேருந்தில் இருக்கும் இருக்கைகளின் எண்ணிக்கைக்கு சமமானதாகும். பயணிகள் இந்த இருக்கைகளில் உட்காருவதோ அல்லது உட்காராமல் நின்றுகொள்வதோ அவரவர் விருப்பம்.

பொதுப் போக்குவரத்தில் பயணம் செய்யும் பயணிகள் எல்லா நேரங்களிலும் முகக் கவசங்களை அணிவது முக்கியமாகும், ஏனெனில் இதுவே அதிகரித்த எண்ணிக்கையில் ப்ராம்ப்ட்டன் போக்குவரத்து பேருந்துகள் செயல்பட உதவும். முகக் கவசம் அணிவதற்கு இணங்காமல் இருப்பது என்பது, ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து, முந்தைய குறைக்கப்பட்ட பயணிகள் எண்ணிக்கைக்கு திரும்பும் நிலைக்கு தள்ளிவிடும். பேருந்துகள் ஜூலை 2 ஆம் தேதி வரை இருக்கைகளின் பாதியளவுக்கே பயணிகளை ஏற அனுமதித்து இயங்கும்.

**இளம் குழந்தைகள் மற்றும் ஆபத்தில் இருக்கும் மக்களுக்கான விதிதிவிலக்குகள்**

முகக் கவசம் அணிவது கட்டாயமாக இருக்கும்போது, விதிவிலக்குகளும்கூட உள்ளன. இரண்டு வயதிற்குட்பட்ட குழந்தைகள், அல்லது மருத்துவ காரணங்களுக்காக முகக் கவசம் அணிய முடியாதவர்களுக்கு விலக்கு அளிக்கப்படும், இருப்பினும் மற்ற பயணிகளிடமிருந்து உடல்ரீதியாக இரண்டு மீட்டர் சமூக விலகலைப் பராமரிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து அமைப்பானது, சமுதாயத்தை ஆரோக்கியமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருப்பதில் கவனம் செலுத்துகிறது. பேருந்து போக்குவரத்து பயணிகள், தங்களது சிறந்த முடிவெடுக்கும் திறனை பயன்படுத்தி, பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு இணங்குவதற்கும், இயலுமேயானால், முகக் கவசம் அணிவதற்கும் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

முக கவசங்கள் மட்டுமே கோவிட்-19 தொற்று பரவுவதைத் தடுக்காது, இருப்பினும் உங்களைச் சுற்றியுள்ளவர்களைப் பாதுகாக்க உதவும். முகக் கவசங்களை அணியும்போது, கைகளில் நல்ல சுகாதாரத்தை தொடர்ந்து கடைப்பிடிப்பது மற்றும் முடிந்தவரை உடல்ரீதியான சமூக விலகலைப் பராமரிப்பது இன்னும் முக்கியமாகும். நீங்கள் நோய்வாய்ப்பட்டிருந்தால், கோவிட்-19 தொற்றுக்கான மதிப்பீட்டு மையம் அல்லது மொபைல் தளத்தில் சோதனை செய்து வீட்டிலேயே இருந்து விடுங்கள், போக்குவரத்தைத் தவிர்க்கவும்.

மருத்துவம் அல்லாத முகக் கவசம் பற்றியும், அதை எப்படி அணிவது, பொருத்துவது அகற்றுவது, தூய்மை செய்வது என்பது பற்றிய மேலும் தகவல்களுக்கும், பீல் ப்ப்ளிக் ஹெல்த் இன் [வலைத்தளம்](#) ஒன்ட்டேரியோ அரசாங்க [வலைத்தளம்](#) ஆகியவற்றுக்குச் செல்லவும்.

**கட்டணம் செலுத்துதல்**

ஜுலை 2 ஆம் தேதி முதல் அனைத்து ப்ராம்ப்ட்டன் போக்குவரத்து பேருந்துகளிலும் கட்டணம் செலுத்துதல் அவசியமாகும். பயணிகள் தங்கள் ப்ரெஸ்டோ (PRESTO) கார்டைப் பயன்படுத்தி தங்கள் கட்டணத்தை உடல்ரீதியான தொடுதல் இல்லாமல் செலுத்த ஊக்குவிக்கப்படுகிறார்கள். தங்கள் பயணங்களுக்கு பணம் செலுத்த இன்னும் பணத்தைப் பயன்படுத்தும் பயணிகள், வாடிக்கையாளர் சேவை கவுன்ட்டரிலிருந்து ஒரு PRESTO அட்டையைப் பெற ஊக்குவிக்கப்படுகிறார்கள். ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே பிரஸ்டோ அட்டைக்கான கட்டணமாகிய $6 தள்ளுபடி செய்யப்படுகிறது - ஒரு வாடிக்கையாளருக்கு ஒரு அட்டை மட்டுமே.

கோவிட்-19 இன் தாக்கத்தைக் கருத்தில் கொண்டு, மூத்தகுடிமக்களுக்கு பேருந்தை அணுகக்கூடியதாக ஆக்குவதே நகர நிர்வாகத்திற்கு ஒரு முன்னுரிமை கொண்ட விஷயமாக உள்ளது; மேலும், செயலில் உள்ள மூத்தகுடிமக்களுக்கான அடையாள அட்டைகள் அனைத்துக்கும் காலாவதி தேதிகள் காலவரையின்றி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

டிரினிட்டி காமன் டெர்மினல் (Trinity Common Terminal) கட்டிடத்தைத் தவிர்த்து, போக்குவரத்து முனையங்களில் உள்ள பிற வாடிக்கையாளர் கவுன்ட்டர்கள் திறந்திருக்கும்.

முன்மொழியப்பட்ட 2020 ஆம் ஆண்டிற்கான கட்டண மாற்றங்கள் மறு அறிவிப்பு செய்யப்படும் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

**பேருந்தின் முன் வாசல் வழியாக ஏறுதல்**

ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து, அனைத்து பயணிகளையும் ஜுலை 2 ஆம் தேதி முதல் முன் வாசல் வழியாக பேருந்துகளில் ஏற அனுமதிக்கும். பயணிகள் பின்புற வாசல் வழியாக வெளியேற வேண்டும்.

அணுகலுக்கான சிறப்பு தேவைகளைக் கொண்ட பயணிகள் முன் வாசல் வழியாகவே வெளியேறலாம்.

BRAMPTON

**Media Release**

**கோவிட்-19 பாதுகாப்பு நடவடிக்கைகள்**

மேம்படுத்தப்பட்ட கால அட்டவணைப்படி பேருந்துகளைத் தூய்மைப்படுத்தி அவற்றில் கிருமிநாசினி தெளிக்கும் வேலை மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு 48 மணிக்கொரு முறை பேருந்துகளின் அனைத்து பரப்புகள், இயக்குபவர் அமருமிடம் மற்றும் அனைத்து இருக்கைகளையும் கிருமிநாசினி தெளித்து சுகாதாரமாக வைப்பதே ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து சேவையின் இலக்காகும். தற்சமயம் பெரும்பாலான பேருந்துகளில் 24 மணி நேரத்திற்கு ஒருமுறை கிருமிநாசினி தெளிக்கப்படுகின்றன. பேருந்து முனையங்கள் மற்றும் நிறுத்தங்களில் உள்ள மேற்பரப்புகளும்கூட தினசரி அடிப்படையில் தூய்மைப்படுத்தி கிருமிநாசினி தெளித்து சுகாதாரமாக வைக்கப்படும்.

பேருந்து முனையங்களிலும், பேருந்து நிறுத்தங்களிலும், முகக் கவசம் அணிந்திருந்தாலும் கூட, முடிந்தவரை உடல் ரீதியான சமூக விலகலைத் தொடர்ந்து பராமரிக்குமாறு நகர நிர்வாகம் பயணிகளைக் கேட்டுக்கொள்கிறது. பயணிகள் தங்கள் சொந்த கிருமிநாசினியை, அதாவது கை சுத்திகரிப்பு அல்லது துடைப்பான்கள் போன்றவற்றை எடுத்துச் செல்லுதல், பயணம் செய்யும் போது அடிக்கடி கைகளை கழுவுதல், இருமல் அல்லது தும்முதல் ஆகியவற்றை முழங்கையில் முகம் புதைத்துச் செய்ய நினைவூட்டப்படுகிறார்கள். உங்களுக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்தால், தயவுசெய்து பயணம் செய்வதைத் தவிர்த்து, அருகிலுள்ள கோவிட்-19 மதிப்பீட்டு மையத்தில் சோதனை செய்துகொண்டு, பொது சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றவும்.

பீல் பப்ளிக் ஹெல்த் அமைப்பின் வழிகாட்டுதலின்பேரில், குறிப்பாக, உடல் ரீதியான சமூக விலகலைக் கடைப்பிடிப்பது ஒரு சவாலான விஷயம் எனும் இடங்களில், ஒவ்வொருவரும் மருத்துவம் அல்லாத முகக் கவசம் அணியுமாறு நகர நிர்வாகம் வலியுறுத்துகிறது.
ஆபத்துக்களைத் தொடர்ந்து கண்காணிப்பதற்காக, ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் பீல் பப்ளிக் ஹெல்த் மற்றும் ப்ராம்ப்ட்டன் அவசரநிலை மேலாண்மை அலுவலகம் ஆகியவற்றுடன் நெருக்கமாக செயல்படுகிறது. வழக்கமான புதுப்பிப்புகளுக்கு www.brampton.ca/covid19 ஐப் பார்வையிடவும், www.bramptontransit.com க்கு வருகை தரவும் அல்லது சேவை புதுப்பிப்புகளுக்காக ட்விட்டரில் @bramptontransit ஐப் பின்பற்றவும். கேள்விகள் ஏதுமிருப்பின் ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து அமைப்பின் தொடர்பு மையத்தை 906.874.2999 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**அறிஞர் கூற்றுக்கள்**

“மீண்டும் திறத்தல் மற்றும் மீட்சி பெறுவதற்கான எங்கள் திட்டத்தின் ஒரு பகுதியாக, ஜூலை 2 ஆம் தேதி முதல் பிராம்ப்டன் பேருந்து போக்குவரத்தில் பல மாற்றங்கள் வரவிருக்கின்றன. பேருந்துகள் அதிகரித்த பயணிகள் எண்ணிக்கையுடன் இயங்கும், மருத்துவம் அல்லாத முகக் கவசங்கள் அல்லது முகத்திரைகள் அணிவது கட்டாயமாக இருக்கும், மற்றும் கட்டணம் செலுத்துதல் மற்றும் முன் வாசல் வழியாக பேருந்தில் ஏறுதல் மீண்டும் அமல்படுத்தப்படும். இந்த மாற்றங்கள் சமூகத்தை ஆரோக்கியமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருக்கும்; அதே நேரத்தில் ப்ராம்ப்ட்டனில் நமக்கு  திறமையானதும் நம்பகமானதுமான போக்குவரத்து சேவை தொடர்ந்து இயங்குவதை உறுதிசெய்கிறது. ”

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து பேருந்துகளில் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதால், பயணிகள்  தங்களையும், போக்குவரத்து இயக்கம் செய்பவர்களுக்கும்  மற்றும் ஒருவருக்கொருவருக்கும், மருத்துவம் அல்லாத முகக் கவசங்களை அணிந்துகொள்வதன் மூலமும், நல்ல சுகாதாரத்தை கடைப்பிடிப்பதன் மூலமும் தக்க மரியாதை செலுத்துவார்கள் என்று நான் நம்புகிறேன். நாங்கள் பயணிகளை அவரவர் இடத்திற்கு கொண்டு சேர்க்கிறோம்; நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து, கோவிட்-*19* தொற்று பரவும் அபாயத்தை குறைக்க முடியும். ”

- *ரொவீனா சாண்ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள்1 & 5; தலைவர், சமுதாய சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"மீண்டும் திறத்தல் மற்றும் மீட்சி பெறுவதற்கான பணிக்குழு மூலம், நகரத்தை மீண்டும் திறப்பதற்கான ஒரு விரிவான மற்றும் படிப்படியாக அளவிடப்பட்ட அணுகுமுறையை உறுதி செய்வதற்காக சமூகத்துடன் தொடர்ந்து அர்த்தமுள்ள விவாதங்களை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம். இந்த முடிவானது, பீல் பப்ளிக் ஹெல்த் அமைப்பின் வழிகாட்டுதலுடன் எடுக்கப்படுகிறது, இதில் பயணிகளின் தேவைகளே முன்னுரிமை கொண்ட விஷயமாக இருக்கிறது ”

- *மார்ட்டின் மெடெய்ரோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 3 & 4; தலைமைப் பொறுப்பு, மீண்டும் திறத்தல் மற்றும் மீட்சி பெறுவதற்கான பணிக்குழு , ப்ராம்ப்ட்டன் நகரம்*

"நமது சமூகத்தை ஆரோக்கியமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருக்க, ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து கடுமையாக உழைத்து வருகிறது. அதிக எண்ணிக்கையிலான பயணிகளுடன் எங்களால் செயல்பட முடியும், ஏனெனில் அதே நாளில் மருத்துவம் அல்லாத முகக் கவசங்கள் அணியத் தொடங்குவது கட்டாயமாக இருக்கும். பயணிகளே - தயவுசெய்து நமது போக்குவரத்து சேவையை ஆரோக்கியமாகவும், பாதுகாப்பாகவும், திறமையாகவும், நம்பகத்தன்மையுடனும் வைத்திருப்பதில் உங்கள் பங்கைச் ஆற்றுங்கள்."

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது**. நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் பரிமாற்றம்
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca

M
M
C
S
C
9